கு.ராஜன்: பெண்ணே! பக்கத்தில், மலைபோல் தெரிகிறதே, அது என்ன?

தாமரை: நாதா! அதுதான், இமயகிரி பர்வதம்.

கு.ராஜன்: பெண்ணே! நாம், எப்படி இதைத்தாண்டி செல்வது?

தாமரை: நாதா! போவதற்கு வழி ஏதாவது இருக்கும்; [redacted] என்று, பக்கத்தில் போய் பார்க்கும்போது, மரம், செடி, கொடி ஒன்றும் இல்லாமல்; நேரே, சரிவாய் இருந்தது, மலை. நாதா! ஏறிச் செல்ல, வழி ஒன்றும் இல்லையே, என்ன செய்வது?

கு.ராஜன்: சரி! வழி இல்லாவிட்டால் போகிறது, நாம் ஊருக்குப் போகலாம் வா.

தாமரை: நாதா! வந்துவிட்டு, ஊருக்கு திரும்பிச் செல்லக்கூடாது; நான், உங்களை முதுகில் கட்டி, மலையின் மேல் தவழ்ந்து செல்கிறேன்; என்று, நாதனை முதுகின் மேல் கட்டி மலையில் தாவி ஏற ஆரம்பித்தாள்.

பாட்டு,

"உள்ளங்கையை ஊந்தியுந்தி
மேலே நில்லோ பத்தினி ஏறுறாளே
பெருவிரலை மெட்டி மெட்டி
மலையின்மேலே ஏறுறாளே தாமரையா"

தாமரை, கையை ஊனி, ஊனி, இரண்டு பனையுயரம் மேலே சென்றாள்; இதை, மாயவர் உச்சத்தில் நின்று பார்த்துக் கொண்டு [redacted],

ஆகா! தாமரை குழந்தை வரத்துக்காக, தன் நாதனை முதுகின் மேல் கட்டி வருகிறாளே,

இவள் சாமர்த்தியத்தை பார்ப்போம்' என்று,
மாயவர், மாய்கையில் தாமரையின் கையை தட்டி
விட்டார். தாமரையின், கை, நழுவி, இருவரும்
உருண்டு வந்து, பூமியில் விழுந்தார்கள்.
கீழே விழுந்ததும் தாமரை எழுந்து,
நாதனை எடுத்து மடியில் வைத்து பார்க்
கும் போது, தன்னுடைய சாமியின் உயி
ர் போய் விட்டது கண்டு-.

'அய்யோ, நாதா!

பாட்டு,,

"நான் மைந்தன் வரம் வாங்க வந்து
இனி வாங்க வந்து.
மன்னவரை அரி ராமா நானிழந்தேன்.
இங்கு நானிழந்தேன்.
பிள்ளை வரம் வாங்க வந்து இனி வாங்க வந்து
புருஷனை மாயவா நானிழந்தேன்
இங்கு நானிழந்தேன்.
குழந்தை வரம் வாங்க வந்து
இனி வாங்க வந்து.
கொற்றவரை நானிழந்தேன்
இங்கு நானிழந்தேன்."

'மைந்தன் வரம் வாங்க வந்து, காஞ்சி நாதா!
மன்னவரை நானிழந்தேன்.
மாயவா! குழந்தை வரம் வாங்க வந்து, இங்கு
கொற்றவரை நானிழந்தேன்.' என்று கன்னி
அழுகிறாளே காந்தேரி சோருகிறாள், நாதனை,
பூமியில் மரத்தடியில் படுக்க வைத்து விட்டு,
'கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து,

நாதன் வெயில் உற்றிப்பார்ப்போம், உயிர் இருந்தாலும் இருக்கும் என்று, கானகத்தில் தண்ணீரை தேடிக்கொண்டு புறப்பட்டாள். இதை அறிந்த மாயவர், கானகத்தில், எங்கும் தண்ணீர் இல்லாமல் செய்து விட்டு; ஒரு இடத்தில் தாமரை தடாகம் சிருஷ்டித்து, எமனை வரவழைத்து, எமன் குயிலாகவும், எம்பெருமாள் மயிலாகவும் வடிவெடுத்து, மயிலும் குயிலும் வனத்தில் கூவியது. தாமரை வனமெல்லாம் தண்ணீர் தேடி, இல்லாமல் களைத்து வரும் போது, மயிலும், குயிலும், கூவும் சத்தம் கேட்டு குளிர்ந்த இடத்தில் தான், மயிலும், குயிலும் இருக்குமென்று பெரியோர்கள் செல்வதுண்டு; அங்கு போய் பார்ப்போம் என்று குயில் கூவும் இடத்தில் போய் பார்க்கும் போது, தடாகத்தில் தண்ணீர் நிறைய இருந்தது. தாமரை, சந்தோசமடைந்து, தடாகத்தின் முதல்படி இறங்கும் போது,

பாட்டு,,

"ஒரு படி பத்தினி இறங்கும் போது
இரண்டுபடி தண்ணீர் கீழே இறங்குதடா
இரண்டு படி தாமரை இறங்கியதும்
நாலு படி தண்ணீர் கீழே இறங்குதடா
நாலுபடி அன்னக்கொடி இறங்கும் போது
ஆறுபடி தண்ணீர் கீழே இறங்குதடா
ஆறுபடி பத்தினி இறங்கும் போது
எட்டுப்படி தண்ணீர் கீழே இறங்குதடா
எட்டுப்படி தாமரை இறங்கும் போது
பத்துப்படி தண்ணீர் கீழே இறங்குதடா"

இப்படியே தாமரை கீழே இறங்கிச் செல்லச் செல்ல, தண்ணீரும் கீழே போய் வறக்குளம் ஆகி விட்டது.

தாமரை: ஆகா, மாயவனே! நான், என்ன பாவம் செய்தேனோ? தண்ணீர் இல்லாமல் போய் விட்டது, என்று, பாறையின் அடியில், சந்தில், தண்ணீர் இருக்குமென்று, பாறைச் சந்தில் உள்ள மண்ணை, கையில் தோண்டி எடுக்கும் போது அங்கு தண்ணீர் இல்லை, ஒரு துவக்காய் இருந்தது, தாமரை துவக்காயைக் கண்டதும், இதையாவது, கொண்டு போய் நசுக்கி, பிழிந்து, நாதன் வாயில் ஊற்றுவோம்; என்று, நினைத்து, துவக்காயை கையில் பிடிக்கும்போது,

துவக்காய்: அய்யோ, தாமரை! என்னைப் பிடிக்கிறீயா? என்றதும், தாமரை, நம் பெயரைச் சொல்கிறது என்று வீசி எறிந்து விட்டு.

பாட்டு

"ஒரு படி தாமரை ஏறுமுன்னே
இரண்டு படி தண்ணீர் மேலே ஏறுதடா
இரண்டு படி அன்னக்கொடி ஏறுமுன்னே
நாலு படி தண்ணீர் மேலே ஏறுதடா
நாலுபடி பத்தினி ஏறியதும்
ஆறு படி தண்ணீர் மேலே ஏறுதடா"

இப்படியே, தாமரை மேலே ஏற வர, தண்ணீரும் மேலே வந்து விட்டது. தாமரை மேலே வந்து, மேற்கு திரும்பி பார்க்கும்போது, மாயவர் ஒரு மரத்தடியில் பரதேசிபோல் வடிவெடுத்து உட்கார்ந்திருந்தார்.

மாயவரைக் கண்டதும், தாமரை பக்கத்தில் சென்று 'பரந்தாமா! தாங்களா? இவ்வளவு வேலையும் செய்தீர்கள்? என்று அட்டம் பணிந்து, ஆளடிமை செய்து. பரந்தாமா! என் நாதன் மடியவேண்டிய காரணமென்ன? தாங்கள் வந்து, என் நாதனை எழுப்பிக் கொடுங்கள்,' என்றாள்.

மாயவர்: 'தாமரை! உன் நாதன் காலம் முடிவாகி இறந்துவிட்டார்; நான், என்ன செய்வது, உன் நாதனுக்கு உயிர் கொடுக்க, நான் சிவபரனை? என்றால், ஏதுவும் செய்ய முடியாதம்மா.'

தாமரை: 'மாயவா! தாங்கள் நினைத்தால், நடக்காதது ஒன்றுமில்லை; உடனே தாங்கள் என் நாதனை எழுப்பித்தர வேண்டும்.'

மாயவர்: 'தாமரை! சரி, கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் கொண்டு வா,' என்று இருவரும் குன்றுடையாசாமி படுத்திருக்கும் மரத்தருகில் வந்து நின்று, மாயவர், தாமரை கொண்டு வந்த தண்ணீரை வாங்கி, குன்றுடையாசாமி மேல் தெளித்து, பொன்பிரம்பை எடுத்து மூன்றுதரம் தட்டினார். தட்டியவுடன் குன்றுடையாசாமி தூங்கி எழுந்தது போல் எழுந்து உட்கார்ந்து மாயவரைக் கண்டு நமஸ்காரம் செய்தார்.

[redacted] 'குன்றுடையாக் கவுண்டா! மங்களம், உண்டாகட்டும்! சுகமாய் இருக்கிறாயா?'

கு.சாமி: 'சிவாமி! தங்களுடைய கிருபையில் சுகமாய் இருக்கிறேன்.'

மாயவர்: 'சரி, நல்லது! தாமரை, இந்த இமயகிரியைத் தாண்டி வர உங்களால் முடியாது. நான் ஒரு உபாயம் சொல்கிறேன், கேளுங்கள்; அதாவது, நான் மேலே போய் உங்களை ஈ போல் வடிவாக்கி ஒரு கயிறு போல் கொடியை கீழே விடுகிறேன், இருவரும் அந்தக் கொடியில் ஒட்டிக்கொள்ளுங்கள் நான் மேலே இழுத்து அந்தப் புறம் இறக்கி விட்டு விடுகிறேன்.'

தாமரை: 'சுவாமி! நல்லதுங்கோ.'

மாயவர், உடனே அவர்கள் இருவரையும் ஈ போல் வடிவாக்கி விட்டு, மலையின் மேல் போய் நின்று கொடியை கீழே விட்டார். ஈ போல் இருந்த தன்னுடைய சாமி தாமரையும், கொடியில் ஒட்டினார்கள். உடனே மாயவர் மேலே இழுத்து அந்தப் புறம் கீழே விட்டார். கீழே இறங்கியதும் தாமரை, 'சுவாமி, தங்களுடைய உதவியால், மலையை தாண்டி விட்டோம். அதோ! முன்னால், நிறைய கல் தெரிகிறதே, அது என்ன! சுவாமி!'

மாயவர்: 'தாமரை! அது தான், கல் ஆறு. அடுத்தது முள் ஆறு. அதுக்கு அடுத்தது நெய் ஆறு. அதற்கு அடுத்தது நெருப்பு ஆறு. அந்த நாலு ஆற்றையும் கடந்து செல்ல வேண்டும்.'

தாமரை: 'சுவாமி! நாலு ஆற்றையும் கடந்து செல்ல, எங்களால் முடியாது,

தாங்கள்தான், நாலு ஆறுகளையும் கடந்து செல்ல அருள் புரிய வேண்டும்.

மாயவர்: சரி நல்லது, தாமரை! நான் முன்னால் வழி ஒதுக்கி செல்கிறேன், நீங்கள் இருவரும் என் பின்னால் வாருங்கள்.

தாமரை: சுவாமி! நல்லது.

பாட்டு

"அப்படியே நல்லதென்று இனி நல்லதென்று
அன்புடனே வருகிறீரே இனி வருகிறீரே
ஆயருட கிருபையாலே இனி கிருபையாலே
வருகிறாளே அரண்பதிதேடியல்லோ"

வசனம்.

மாயவர், இருவரையும் நாலு ஆற்றையும் தாண்டி கூட்டி வந்து, தாமரை! இனி அடுத்தது நாக வனம், அந்த வனத்தில், ஒரு நாகன் வந்து உங்களை வழியை குறுக்கு காட்டும்; அது எனக்கு ஒரு வரம் வாங்கி வா என்று சொல்லும்; வாங்கி வருவதாக சொல்லி விட்டு, வாடி கல்லுக்கு வந்து சேருங்கள், என்று மாயவர் முன்னால் சென்று விட்டார். மாயவர், சென்ற பின் இருவரும் நடந்து நாகவனம் வரும் போது, நாகன் யாரோ நம் வனத்தில் வருகிறார்கள் என்று படமெடுத்து—

பாட்டு

"சீறு சீசா என்னத்தா நாகனது
சீற்றியே என் சாமி வருகுதுபார்
ஆக்கரித்து என் சாமி பல் கடித்து
ஆங்காரமாய் என் சாமி வருகுது பார்"

127 நாகன் கோபமாக வந்து, அருகில் பார்க்கும் போது, இருவரும் தெய்வபிறவியாக இருப்பதைப் பார்த்து—

[illegible]. 'அம்மா! நீங்கள் யார்? எந்த நாடு?'

தாமரை. 'நாகேந்திரா! நாங்கள் பொன்னிவளநாடு, என் பெயர், தாமரையாக் கவுண்டிச்சி, அருகில் நிற்பவர் என் நாதன்.'

நாகன். 'ஆகோ! அப்படியா, நல்லது! நீங்கள் வருவீர்கள் என்று, மாயவர் என்னிடம் சொன்னார்.'

பாட்டு,,

"அம்மா உனக்கு வரம் வாங்கயிலே
எனக்கு வரம் அன்னக்கொடி வாங்கிவாம்மா!"

'அம்மா, தாமரை! உனக்கு வரம் வாங்கயிலே எனக்கு ஒரு வரம் வாங்கி வாம்மா; அம்மா, தாமரை! நீ தேடும் மைந்தர்கள் வந்த காலத்தில், என் குழந்தையும், உன் குழந்தைகளுக்கு, உதவி செய்யும்.'

தாமரை. 'நாகேந்திரா! அப்படியே, வரம், வாங்கி வருகிறேன்.'

நாகன். 'சரி, நல்லது! சுகமாய் போய் வாருங்கள்!'

தாமரையும், குன்றுடையா சாமியும், நாகனிடம் விடை பெற்று புறப்பட்டார்கள்.

பாட்டு,,

"அப்படியே என்னுத்தா நல்லதென்று
இனி அன்புடனே வருகிறோமே.
வரடிகல்லு தேடியல்லோ
வருகிறார் என் சாமி இருவருமே"

இருவரும் வரடிகல்லு வந்து சேரும் போது, மாயவர் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

மாயவர். 'தாமரை! சுகமாய் வந்து சேர்ந்தீர்களா?'

தாமரை: சுவாமி! தங்களுடைய கிருபையால், வந்து சேர்ந்தோம்.

மாயவர்: சரி, நல்லது! அதோ! கங்கை நதி ஓடுகிறது, அதில் போய் குளித்துக் கொண்டு வா.

தாமரை உடனே சென்று குளித்து விட்டு வந்து நின்றாள்.

மாயவர்: தாமரை! இவ்வுட படிக்கட்டில், கல்லும், முள்ளும், இருக்குது பார், அதை மண்டியிட்டு வாயில் கவ்வி, இந்த வரடி கல்லை ஏழுதரம் சுற்றிவா. தாமரை உடனே மண்டியிட்டு, கல்லையும், முள்ளையும் வாயில் எடுத்து கல்லை ஏழுதரம் சுற்றிவந்து, முன் போல், கல்லையும், முள்ளையும் படிக்கட்டில் வைத்து விட்டு எழுந்து நின்றாள்,

மாயவர்: தாமரை! தம்மிடுக்கு இருவர், தவசுக்கு, நீ, ஒருத்தி தான் வரவேண்டும், உன், நாதனை இங்கு வைத்து, உயிரை பிடித்து தங்கச் சிமிழில் அடைத்துக் கொண்டு செல்வோம்; 21. வருஷம், முடிந்து போகும் போது உயிரை கொடுப்போம்.

தாமரை: சுவாமி! அப்படியே, நல்லது.

உடனே, மாயவர் குன்னுடையாக் கவுண்டனை வரடி கல்லின் மேல் உட்காரவைத்து, உயிரை பிடித்து தங்கச் சிமிழில் அடைத்துக் கொண்டு, மாயவரும் தாமரையும் புறப்பட்டார்கள்.

பாட்டு,,

"அப்படியே என்சாமி நல்லதென்று
அன்புடனே என்சாமி வருகிறாரே
மாயவரும் என்சாமி முன் நடக்க
தாமரையும் என்சாமி பின் தொடர்ந்தாள்
பரந்தாமன் என்சாமி முன் நடக்கோ
பத்தினியும் என்னத்தா பின் நடந்தாள்
தெய்வசபை என்சாமி தேடியல்லோ
தாமரையை என்சாமி கூட்டி வாறார்"

தெய்வசபைக்கு பக்கம் வந்து நின்று, மாயவர், தாமரை! தெய்வசபையில், பாவம் செய்த மானிடரை நரகத்தில் போட்டு மிதிப்பார்கள், தர்மம் செய்தவர்களை, சொர்க்கத்திலும் வைப்பார்கள்; கர்மம் செய்தவர்களை நரகத்தில் போட்டு மிதிக்கும் போது, அவர்கள் உயிர், அய்யோ, அய்யோ வென்று அழுகும், ஆகையால், நீ எங்கும் திரும்பி பார்க்காமல், என் பின்னால் வரவேண்டும்.'

தாமரை 'சுவாமி! நல்லது.' என்று, மாயவர் முன்னாலும், தாமரை பின்னாகவும் சிறிது தூரம் சென்றதும், அங்கு ஒரு பெண்ணை நரகத்தில் போட்டு மிதித்துக் கொண்டு இருந்தார்கள், அந்தப் பெண்ணின் உயிர், அய்யோ, அய்யோ என்று சத்தமிட்டதை, தாமரை திரும்பி பார்த்து, 'சுவாமி! இந்தப் பெண், என்ன பாவம் செய்தாள்? உயிரை, நரகத்தில் போட்டு மிதிக்கிறார்களே, ஏன், சுவாமி?'

மாயவர், 'தாமரை! நான், திரும்பி பார்க்ககூடாது, என்று சொல்லியும் நீ, கேட்கவில்லையே; அந்தப் பெண், பூலோகத்தில், வண்ணான் கூலி, நாவிதன் கூலி, மருத்துவர் கூலி, இவர்களுக்கு கூலியை கொடுக்காமல் அநியாயம் செய்ததால் நரகத்தில் போட்டு மிதிக்கிறார்கள்; இனி என்ன சத்தம் கேட்டாலும், திரும்பி பார்க்காமல் என் பின்னால் வா.' என்று, இருவரும் சிறிது தூரம் போகும்போது. அங்கு ஒரு பெண்ணை மரத்தில் தலை கீழ், கால் மேலாக கட்டி தூதர்கள் சவுக்கால் அடித்துக் கொண்டு இருக்கும் போது, அந்தப் பெண் உயிர், அய்யோ, அய்யோ வென்று சத்தம் போடுவது, தாமரை காதில் கேட்டு, 'மாந்தாமா! இவள் என்ன பாவம் செய்தாள்? தலை கீழாக கட்டி அடிக்கிறார்கள்.'

மாயவர்: 'தாமரை! அவள், பூலோகத்தில்...'
பாட்டு,

"புருஷனை கீழே வைத்து அவள்
கட்டிலேறி படுத்தவம்மா.
கணவரை கீழே வைத்து அவள்
கட்டிலேறி படுத்தவம்மா."

'அதனால்தான், அவளுக்கு இந்த தண்டனை கொடுக்கிறார்கள், சரி இனி எங்கும் திரும்பி பார்க்காமல், என் பின்னால் வா.' என்று இருவரும் சிறிது தூரம் சென்றதும், அங்கு ஒரு ஆண் பிள்ளையின் உயிரை, நான்கு பேர் சேர்ந்த

நரகத்தில் போட்டு மிதித்துக் கொண்டு இருந்தார்கள். தாமரை, அதை பார்த்தும், சுவாமி! இந்த, ஆண்மகன் என்ன பாவம் செய்தான்?

மாயவர்: 'தாமரை! இவன், கட்டிய மனைவியை விட்டு, தேவடியாளிடம் குடும்பம் நடத்தினான்; அதனால் இவனுக்கு இந்த தண்டனை கிடைக்கிறது, சரி! இனி எதையும் பார்க்காமல், என் பின்னால் வா, என்று, மாயவர் முன் நடந்தார்.'

பாட்டு,,

"தெய்வ சபை தேடியங்கே இனி
மாயவரும் கூட்டி வாரார்.
ஆயரும் முன் நடக்கவே இனி
அருங்கிளியும் பின் தொடர்ந்தாள்"

இருவரும், காசி பொன்னம்பலம், தன்னாசிக் கோம்பை வந்து சேர்ந்தார்கள்.

மாயவர்: 'தாமரை! இது தான், முன்நாளில் அர்ச்சுனன் தவம் செய்த இடம். இங்கு தான் நீயும் தவம் செய்ய வேண்டும், அதோ, பார்! அரசமரம் பொந்தில், காவி வேஷ்டியும், உத்திராக்ஷ மாலையும், கவச குண்டலமும், பஞ்சாக்ஷரம், விபூதி பெட்டி இவை எல்லாம் இருக்கும் எடுத்து வா.'

தாமரை: 'சுவாமி! எல்லாம், எடுத்து வந்தேன்.'

மாயவர்: 'சரி! உன், ஆடைகளை அகற்றி விட்டு, காவி வேஷ்டியை கட்டிக்கொள்.'

தாமரை: சுவாமி! அப்படியே, கட்டிக் கொண்டேன்.

மாயவர்: சரி! இந்த உத்திராக்ஷ மாலையை கழுத்தில் போட்டுக்கொண்டு, பஞ்சாக்ஷர விபூதியை, தேகம் முழுவதும் பூசிக்கொள். என்று, மாயவர், ஏழு ஊசிகளை பாறையில் ஊன்றி, ஏழு ஊசி முனைகளையும் ஒன்றாக சேர்த்து, அதன் மேல் ஒரு செயகண்டியை வைத்து, அதன் மேல் ஒரு பாசியை வைத்து, அதன்மேல் ஒரு செப்பூசியை வைத்து, அதன் மேல் ஒரு செவ்வரளி பூவை வைத்து, தவசுக் கம்பம் உண்டாக்கி, சரி, தாமரை! இந்த தவசு நிலையில் ஏறி, ஒரு காலை மண்டியிட்டு, ஒரு காலை தண்டி வாங்கி, இரண்டு கண்களையும் மூடி, கை, இரண்டை ஏந்தி, சிவனை நோக்கி, கடுந்தவம் செய் என்றார்.

தாமரை: சுவாமி, நல்லது! என்று, தவசு நிலையில் ஏறும் போது; தவசு நிலைக்கம்பம், நிலை கொள்ளாமல் ஆடியது.

மாயவர்: தாமரை! கீழே, இறங்கி வா! என்ன குற்றம் செய்தாய்? தவசு நிலை ஆடுகிறது, மறைக்காமல் சொல்?

தாமரை: சுவாமி! நான், ஒரு நாள்! என் அரண்மனையில் படுத்திருந்தேன்; அப்போது, என், நாதர் எங்கோ சென்று விட்டு, உள்ளே வந்தார் அப்போது என், கால், பெரு விரலில், அவர்பாத

பட்டுவிட்டது! அதைத்தவிர, நான், ஒரு பாவமும் செய்யவில்லை.

மாயவர்: தாமரை! அதுவும், ஒரு பாவம் தான்! நீ, மறுபடியும் கங்கைக்கு சென்று, ஏழுதரம் தலைமுழுகி, வா! என்றார். தாமரை, அப்படியே சென்று ஏழுதரம் தலைமூழ்கி, மாயவரிடம் வந்தாள்.

சரி! இனி தவசு நிலையில் ஏறி, நான் சொன்னது போல், இருந்து கொள்! என்றார். தாமரை, நல்லது என்று, மேலே ஏறி, கை இரண்டையும் ஏந்தி கருந்தவம் புரிந்தாள். மாயவர், உடனே தாமரையின் உயிரை பிடித்து, தங்கச் சிமிழில் அடைத்துக் கொண்டு, தாமரையின் கூந்தலை, நான்கு சடையாக பின்னி, இருபத்து ஒரு வருஷம் ஆவதற்குள், காற்றும், மழையும் வந்தால், கீழே சாய்ந்து விடுவாள்! என்று, நாலு சடையையும், நாலு மூலைக்கு இழுத்து, ஆணியில் ஒட்டும்படி செய்து விட்டு. 'சரி! இனி நாம் செல்வோம், ௨௧. வருஷம் இப்படியே இருக்கட்டும், முடிந்தபின் வந்து, வரம், வாங்கி கொடுக்கலா'மென்று, மாயவர் பால் கடல் போய் சேர்ந்தார்.

பாட்டு,,

"அந்த நல்லோ பிரகாரம் இனி பிரகாரம்
நடக்குதுபார் அந்நேரம் இனி அந்நேரம்
நாலொருநாள் பொழுதொருநாள் அங்கு
நடத்துவாளே தாமரை அருந்தவசு.
இருபத்தி ஒருவருஷம் இனி ஒருவருஷம்
பெருந்தவம் பத்தினியா செய்யுறாளே
அங்கு செய்யுறாளே."

---

இருபத்து ஒரு வருஷம் சரியாக முடியும்போது, மாயவர் பார்த்து, ஆகா! இனி சீக்கிரம்போய், தாமரைக்கு வரம் வாங்கி கொடுக்கவேணும் என்று, கருடவாகனமேறி, காசி பொன்னம் பலத்தை நோக்கி புறப்பட்டார்.

p. 171

பாட்டு,,

" அண்பதி தேடியல்லோ இனி
ஹரிராமர் வருகிறாரே.
சிவன் பதி தேடியல்லோ
அங்கு ஸ்ரீராமர் வருகிறாரே.
கைலாயம் தேடியல்லோ இனி
கண்ணபிரான் வருகிறாரே.
தெய்வசபை தேடியல்லோ
வருகிறாரே மாயவரும்"

---

மாயவர் காசி பொன்னம்பலம் வந்து, தவசு நிலையையும், உருவத்தையும் பார்க்கும் போது, காய்ந்து ஒரு விறகு மாதிரி தொங்கினாள். மாயவர் உடலைக் கொண்டு வந்து பார்க்கும் போது, மண்டையில் பெருங் கறையான் அரித்துக் கொண்டு இருந்தது.

தாமரையின் (மூக்கு) நாசியில், தெய்வ சபை, இந்திராணி கிளி, கூடு வைத்திருந்தது. கிளியின் குஞ்சுகள், விளையாடிக் கொண்டு, இருந்தது. மாயவர் அதைப் பிடித்து, 'நீ, தெய்வ சபையில் இருக்க வேண்டாம், பூலோகத்திற்கு சென்று விடு' என்று, வீசி விட்டார். கிளிகள் இரண்டும், பொன்னி வள நாடு வந்து சேர்ந்தது. கிளிகள், 'அக்கா! நாம், இங்கு இருந்தால், பின் காலத்தில், தாமரையின் மைந்தர்கள் வந்து, ~~[illegible]~~ நம்மை பிடித்து கொடுமைகள் செய்வார்கள்' என்று, வீரப்பூர் சென்று, வீரதங்கா, பத்தினியிடம் அடைக்கலம் புகுந்தது.

வீரதங்கா. 'அம்மா, கிளிக் குஞ்சுகளே! நீங்கள், எந்த ஊர்?'

கிளி. 'அம்மா! நாங்கள், தெய்வ சபைக் கிளி! பொன்னி வள நாட்டு தாமரையாக் கவுண்டச்சி, 21 வருஷம் தெய்வ சபையில் தவமிருந்தார்கள், அவள் நாசியில் கூடு கட்டி, நாங்கள், வாழ்ந்தோம்; 21 வருஷம் முடிந்ததும், மாயவர் வந்து பார்க்கும் போது, நாங்கள் இருந்ததைக் கண்டு, எங்களைப் பிடித்து, கீழே பூலோகத்தில் வீசி விட்டார்; நாங்கள், பொன்னி வள நாட்டில் இருந்தால், பின் காலத்தில், தாமரையின் மைந்தர்கள் வந்த காலத்தில், எங்களுக்கு ஆபத்து வருமென்று, தங்களிடம் வந்து விட்டோம், காராளர் இங்கு வரமாட்டார்...

என்று நினைத்து, உங்களிடம் வந்தோம்.

வீரதங்: சரி, நல்லது! என்று, நாகமலை, தோகைமலை, நால்பக்கமும் சூழ்ந்தமலை, பத்திப்படர்ந்தமலை, பாரமுள்ள வீரமலை, சக்திப்படர்ந்தமலை சுகிர்தமுள்ள வீரமலைக்கு. அந்தப்புறம், மதுக்காரவனத்துக்கு இந்தப்புறம், வெள்ளியங்கிரிதடாகம் இருந்தது. கைசொட்டு ஆலமரம், ~~[illegible]~~ கருகு பழுதையிரம்; விரல்சொட்டு ஆலமரம் விழுந்து பழுதையிரம்; அந்த மரத்தின் மேல்புறம் வாசல், நாட்டுக்கிளிகள் ஆயிரம் கூடு கட்டி வாழ்ந்தது. வீரதங்காபத்தின், தெய்வகிளி இரண்டையும், ஜலமூலை பார்சலில் உள்ளவாசில் விட்டு, நீங்கள், இருவரும், இங்கு பயமில்லாமல் இணைபிரியாமல், வாழுங்கள்! என்று சொல்லி, வீரதங்காபத்தின் கிளியை, யாராவது பிடித்து விடுவார்கள் என்று, அடுத்த வனத்தில் ஐயாயிரம் நாகனை காவல் வைத்து, அதற்கு அடுத்த வனத்தில் ஐயாயிரம் வேங்கையும் காவல் வைத்து, பாதுகாத்து வந்தாள்.

இங்கு இப்படி இருக்கும்போது, தெய்வசபையில், மாயவர், தாமரையின் உடலை, கங்கை நதிக்கு எடுத்துச் சென்று, தண்ணீரில் போட்டு நனைத்து, மேலே கொண்டு வந்து, உயிரைக் கொடுக்கிறார்.

உயிரைக் கொடுத்தவுடன், தாமரை திடீரென்று எழுந்தது.

பாட்டு,,

"எங்கே ஐயா மைந்தனென்று
அன்னக்கொடி ஏந்திழையே கையிரண்டை

மாயவர் பாட்டு,,

ஏறும்மா தாமரை கம்பத்திலே
இருந்துக்கம்மா பத்தினி கடுந்தவம்.

தாமரை! முன்போல், தவநிலையில் ஏறி; ஈஸ்வரனை தோத்தரித்து, கடுந்தவம் செய்! நான் தெய்வ சபையில், அக்கினியை வளர்த்துவிடுகிறேன்! தாமரை, கம்பத்தில் ஏறியதும், மாயவர் தெய்வ சபையில், அக்கினியை வளர்த்துவிட்டார்.

பாட்டு,,

"அக்கினி அக்கினி செண்டுகளும்
ஈஸ்வரனை என்சாமி எரிக்குது பார்!"

ஈஸ்வரன்: அடே, தூதர்களே! ஓடிப்பாருங்கள்! சண்டாளன், எவனோ! அக்கினியை விட்டு என்னை எரிக்கிறான். அரசமரத்தடியில் யாராவது, தவம் செய்கிறார்களா? என்று ஓடிப்பார்! என்றதும், தூதர்கள் ஓடிப் பார்க்கும்போது, தாமரை தவம் செய்வதைக் கண்டு, ஓடிவந்து ஈஸ்வரனிடம்

~~தூதர்.~~ சுவாமி! யாரோ, ஒரு பெண்! சிவநிலைக்

கம்பம் நாட்டி கடுந்தவம் செய்கிறாள், யார்! என்று, தெரியவில்லை.

ஈஸ்வரன்: அந்த, சண்டாளியை! தெய்வசபைக்கு, யார் கூட்டி வந்தது? தூதர்களே! அவளைப் போய் கீழே இழுத்துப்போட்டு, இப்புக் கோட்ரியில், துண்டு துண்டாக வெட்டி, மூன்று நரகத்தின் கீழே போட்டு, மிதித்து விட்டு, வாருங்கள். தூதர்கள் அப்படியே சென்று, தாமரையை வெட்டி, நரகத்தில் போட்டு மிதித்து விட்டு, வந்தார்கள். ஈஸ்வரனுக்கு, அக்கினி அடங்கியது.

மாயவர்: ஆகா! தாமரையை வெட்டி, நரகத்தில் போட்டு மிதித்து விட்டார்களா! என்று, கவயை எடுத்துக் கொண்டு போய், நரகத்தை விலக்கி விட்டு, மூன்று எலும்புகளை பொறுக்கிக் கொண்டு போய், கங்கையில் போட்டு நனைத்து, மேட்டில் போட்டு, உயிரைக் கொடுத்தார். தாமரை, டீரென்று எழுந்தது.

பாட்டு,,

"எங்கேயய்யா மைந்தன் என்று
எழுந்தாளே தாமரை கையிரண்டை"

மாயவர்: தாமரை! இரண்டு பிறப்பு, ஆகி, விட்டது! இன்னும், ஐந்து பிறப்பு இருக்கிறது.

தாமரை! மறுபடியும் தவசு நிலையில் ஏறி தவம் இருந்தாள். மாயவர், முன்போல், தெய்வ சபையில் அக்கினியை வளர்த்து விட்டார்.

பாட்டு,,

"அக்கினி சென்று கனலும் இனி
எரியுதே ஈஸ்வரன் தேகமெல்லாம்"

ஈஸ்வரன்: அடே, தூதர்களே! ஓடி வாருங்கள்! மறுபடியும், எவளோ, அக்கினியை விட்டு எரிக்கிறாள், ஓடிப்பாருங்கள்! என்றார். தூதர்கள் ஓடிப்பார்க்கும் போது, அதே பெண், மறுபடியும் தவம் இருப்பதை பார்த்து, ஈஸ்வரனிடம் வந்து 'சுவாமி! அதே பெண், மறுபடியும் தவம் செய்கிறாள்!' என்றார்கள். 'அடே, தூதர்களே! சீக்கிரம் போய், அவளை இம்புக்கோடரியில் வெட்டி, வைக்கோல் போரில் போட்டு, தீயை வைத்து, எரித்து விடுங்கள்!' என்றார். தூதர்கள் சென்று, அப்படியே செய்து வந்தார்கள். அப்போது, ஈஸ்வரனுக்கு அக்கினி குறைந்து விட்டது.

மாயவர் ஓடிப்போய், வைக்கோல் போர், நெருப்பை அணைத்து விட்டு, கவயில் விலக்கிப் பார்க்கும் போது, மூன்று எலும்பு கிடந்தது. அதை எடுத்துக் கொண்டு, கங்கைக்குச் சென்று, தண்ணீரில் போட்டு